Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 02 | 15-04-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 56

மங்கையர் மனங்கவரும் நவீன நகை உலகில் தங்க நகைகளுக்கு தனித்துவம் பெற்ற நிறுவனம்

கணேசா நகையகம்

(சி-7834)

கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா.

# ஆரையம்பதியில் வரதன் குழு அடாவடித்தனம்

# கைக்குண்டு வீச்சிற்கு குடும்பஸ்தர் மரணம்

## திருப்பித் தாக்கியதில் வரதன் குழுவில் ஒருவர் பலி!

(மட்டக்களப்பு)

**மட்டு.ஆரையம்பதியில் வரதன் குழுவைச் சேர்ந்தவர்கள் புரிந்த அராஜகத்தின் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் கிரனைற் தாக்குதலில் கொல்லப்பட்டதோடு, மூன்று பெண்கள் உட்பட நால்வர் படுகாயங்களுக்குள்ளாகினர். இதேவேளை, வரதன் குழுவினர் மீது தாக்குதலுக்குள்ளான குடும்பத்தவர்கள் நடத்திய தாக்குதலில் வரதன் குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதோடு, நால்வர் காயமடைந்தனர்.**

ஆரையம்பதியில் நேற்று முன்தினம் மாலை வீட்டின் முன்பாக நின்றிருந்த பெண்ணொருவர் மீது வரதன் குழுவினர் பட்டாசுகளை வீசியெறிந்ததையடுத்து எழுந்த முரண்பாடு காரணமாகவே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பட்டாசு வீசியதையடுத்து வீட்டிலிருந்த குடும்பத்தவருக்கும், வரதன் குழுவிற்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், பின்னர் கைகலப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து அப்பெண்ணின் வீட்டின் மீது இரவு வரதன் குழுவினரால் கைக்குண்டு வீசப்பட்டதாகவும் இதில் அழகுதுரை

(08ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான, பொருளாதார முயற்சிகளுக்கு

## இந்தியா பூரணமான ஒத்துழைப்பு வழங்குமாம்!

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கும், பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் இந்தியா தனது பூரண ஒத்துழைப்பை வழங்குமென இந்திய நிதியமைச்சின் செயலாளர் எஸ். நாராயணன் கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக சென்றுள்ள நிதியமைச்சின் செயலாளர் அமைச்சர் மிலிந்த மொறகொடவைச் சந்தித்தபோது இதனை மீண்டும் உறுதிப்படுத்தினார். இதேவேளை, இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் பாலம் ஒன்று அமைக்கப்படுவதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை மேம்படுத்த முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அமெரிக்கா உப சனாதிபதி அமைச்சர் மொறகொட சந்திப்பு

(கொழும்பு)

அமெரிக்க உப சனாதிபதியை சிறிலங்காவின் பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஜப்பானிய நிதியுதவி மாநாட்டிற்கு முன்னோடியாக நடைபெறும் வாஷிங்டன் மாநாட்டிற்கு சென்றுள்ள போதே அமைச்சர் மிலிந்த மொறகொட அமெரிக்க உப சனாதிபதியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதேவேளை, உலக வங்கி

(08ஆம் பக்கம் பார்க்க)

## இந்.-இல. இடையிலான பாலம் மூலம் வர்த்தகத்தை வலுப்படுத்த முடியும்!

### அமைச்சர் மிலிந்த மொறகொட

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைப்பதன் மூலம் வர்த்தக நடவடிக்கைகளை வலுப்படுத்த முடியும் என சிறிலங்காவின் அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக அமெரிக்கா சென்றுள்ள இந்திய நிதியமைச்சின் செயலாளர் நாராயணனை சந்தித்துப் பேசிய போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையில் புகையிரதச் சேவையினை விரிவாக்குவதற்கு இந்திய அரசாங்கம் உதவி புரியும் என இந்திய நிதியமைச்சின் செயலாளர் இச்சந்திப்பின்போது தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி

(08ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா-சிறிலங்கா சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்!

### அடுத்த வருடத்தில் இறுதித் தீர்மானம்

(கொழும்பு)

அமெரிக்காவுடன் சுதந்திரவர்த்தக ஒப்பந்தமொன்றை ஏற்படுத்துவது குறித்து அடுத்த வருடமுற்பகுதியில் இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படும் என சிறிலங்காவின் வர்த்தக பாவனையாளர் விவகார அமைச்சர் ரவிகருணநாயக்க தெரிவித்துள்ளர்.

உற்பத்தி மற்றும் முதலீட்டு ஒப்பந்தத்தின்கீழ் இருநாடுகளுக்குமிடையிலான கூட்டுப்பேரவையின் மூன்றாவது கூட்டம் நடைபெறும் போது இதற்கான இறுதித்தீர்மானம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## இல.யின் எதிர்கால பொருளாதார மையமாக வடக்கு - கிழக்கே விளங்குகிறது

### கொழும்பு பல்கலை. விரிவுரையாளர் உயங்கொட

எதிர்கால இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியின் மத்திய நிலையமாக வடக்கு- கிழக்கு விளங்குகின்றது என கொழும்புப் பல்கலைக்கழக அரசியல்துறை விரிவுரையாளர் கலாநிதி ஜெயதேவ உயங்கொட தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உலக நிதிகள் வடக்கு -கிழக்கிலேயே அதிகம் பயன்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் வடக்கு-கிழக்குப் பகுதி மக்களே போரினால் அதிகளவில் பாதிக்கப் பட்டுள்ளனர். எனவே சர்வதேச நாணய நிதியம் உலகவங்கி மற்றும் சர்வதேச நாடுகளிடம் இருந்து கிடைக்கும் நிதி உதவிகள் அந்தப்பகுதிகளுக்குச் செல்லவேண்டும்.

எதிர்கால இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியின் மத்திய நிலையமாக வடக்கு-கிழக்கு விளங்குகின்றது.

வடக்கு- கிழக்கில் உள்ள மீன்வளம் அந்தப் பகுதி மக்களுக்குக் கிடைக்கவில்லை. அந்த மீன் வளத்தை ஜப்பான், சீனா, இந்தியா போன்ற நாடுகள் பெற்றுக்கொண்டிக்கின்றன.

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்மிரேச் தலைமையில் அமெரி. மாநாடு ஆரம்பம்!

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாடு நேற்று அமெரிக்காவில் ஆரம்பமாகியது.

வாஷிங்டனில் நடைபெறும் இந்த மாநாட்டிற்கு அமெரிக்காவின் பிரதி வெளிவிவகார அமைச்ர் ரிச்சட் ஆர்மிரேச் தலைமை தாங்குகின்றார்.

சிறிலங்கா அரச தரப்பில் அமைச்சர்கள் மிலிந்த மொறகொட பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அடங்கலான குழுவினர் இதில் கலந்துகொள்கின்றனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## பாக். படைத்துறை அதிகாரிகள் மாறப்பனவுடன் சந்திப்பு

பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு கல்லூரியின் படை அதிகாரிகள் குழுவினர் சிறிலங்காவின் படைத்துறை அமைச்சர் திலக் மாறப்பன உட்பட முப்படை தளபதிகளையும் சந்தித்து பேச்சுக்களை நடத்தியுள்ளனர். இந்தப் பேச்சுக்களின்போது இரு தரப்பு படை ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு விடயங்களில் ஒருமித்த செயற்பாடுகள் என்பன குறித்து ஆராயப்பட்டுள்ளன.

மேஜர் ஜெனரல் முகமட் சிற்றி தலைமையிலான 14 படையதிகாரி

(08ஆம் பக்கம் பார்க்க)

## சிரியா மீது அமெரிக்கா கடும் சீற்றம்; தாக்குதல் நடாத்த வழிவகுக்குமா?

"சிரியா அரசாங்கம் பாரிய தவறுகளை இழைத்துவிட்டது. அத்துடன் தவறான அணுகுமுறையை அது எடுத்துள்ளது. மேலும் தவறானவர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது." என அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை செயலாளர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் சிரியாவை எச்சரித்துள்ளார்.

இவ் எச்சரிக்கையானது ஈராக் போரை அடுத்து அமெரிக்காவின் கவனம் சிரியா மீது திரும்பியிருப்பதாகவும், சிரியா குறித்து அமெரிக்கா விடுக்கும் எச்சரிக்கையானது அமெரிக்கா எதிர்காலத்தில் சிரியா மீது தாக்குதல் ஒன்றை நடாத்தக் கூடும் என்ற ஐயப்பாட்டை தோற்றுவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக் மீதான தாக்குதலை ஆரம்பித்த சிலநாட்களுக்குள்ளேயே ஈராக்கிற்கு சிரியா இராணுவ உதவிகளை வழங்குவதாகக் குற்றம் சாட்டிய அமெரிக்கத் தரப்பு தற்

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அரசியல் விவகாரக்குழு நேற்று வன்னிக்குத் திரும்பியது!

ஸ்கண்டிநேவிய நாடுகளுக்குச் சென்ற விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக் குழு நேற்று வன்னி வந்தடைந்துள்ளது.

நோர்வே, டென்மார்க், சுவிஸ், பின்லாந்து போன்ற நாடுகளுக்கு சென்று அங்குள்ள அரசியல் மற்றும் நிர்வாக முறைகள் பற்றி ஆராய்வதற்காக கடந்த 30ஆம் திகதி வன்னியில் இருந்து புறப்பட்ட இக்குழுவினர் தமது முதல் சுற்றுப்பயணத்தை முடித்து நேற்று பிற்பகல் 5.30 மணிக்கு கிளிநொச்சியை

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**உயர் கல்வி நிறுவனம்**

உயர்கல்வி நிறுவனம் கிளிநொச்சி (அறிவுடைமை) பௌதிகவியல் 2005 ஆசிரியர் திரு. K. கெங்காதரன். 16-04-2003 புதன்கிழமை காலை 10.00 மணி. நிர்வாகி, பவானந்தன். (3085)

**உயர் கல்வி நிறுவனம்**

உயர்கல்வி நிறுவனம் கிளிநொச்சி (அறிவுடைமை) அளவையியல் 2005 ஆசிரியர் திரு. S.Y ராஜன் 16-04-2003 புதன் கிழமை காலை 10.00 மணி. நிர்வாகி பவானந்தன். (3086)


# சமாதான முயற்சிகளுக்கு உதவக்கோர
# சர்வமதக் குழு சனாதிபதியைச் சந்திக்கும்

## கத்தோலிக்க ஆயர் பேரவை முடிவு

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதானச் செயற்பாடுகளுக்கு சனாதிபதியின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு இலங்கை கத்தோலிக்க ஆயர்பேரவை முயற்சி மேற்கொண்டுள்ளது. இந்தப் பேரவையின் இவ்வாண்டுக்கான கூட்டத்தொடர் கடந்த வாரம் இடம்பெற்றபோது இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சனாதிபதியின் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளுக்கு இடையூறாக இருப்பதாக உணரப்படுவதாகவும் ஆயர்கள் இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனை அடுத்து ஏனைய மதத் தலைவர்களையும் உள்ளடக்கிய சர்வமததலைவர்கள் குழுவொன்று சனாதிபதியைச் சந்திப்பதற்கும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

## நிர்வாக முகாமைத்துவப் பயிற்சி
## தமிழர் பு.க. வழங்குகிறது

மக்கள் மத்தியில் பணிபுரியும் நிறுவனங்களுக்கு நிர்வாக முகாமைத்துவப் பயிற்சி நெறியினைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வழங்கி வருகின்றனர்.

நிவாரணம், புனர்வாழ்வு, அபிவிருத்தி தொடர்பாக மக்கள் மத்தியில் பணிபுரியும் நிறுவனங்கள் திறம்படச் செயற்படும் வகையில் இப்பயிற் சித் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது.

இத்னடிப்படையில் 400 பேருக்கு அலுவலக முகாமைத்துவப் பயிற்சியும், 70 பேருக்கு நிர்வாக முகாமைத்துவப் பயிற்சியும், 75 பேருக்கு திட்ட முகாமைத்துவப் பயிற்சியும், 75 பேருக்கு நிதி முகாமைத்துவப் பயிற்சியும், 120 பேருக்கு கிராமியத் தொண்டர் களுக்கான சமூக வலுவூட்டல் பயிற்சியும், 30 பேருக்கு நீர் சுகாதார முகாமைத்துவப் பயிற்சியும், 15 பேருக்கு நில அளவை சிவில் தொழில் நுட்பவியல் பயிற்சியும், 20 பேருக்கு கணினி மற்றும் நிகழ்ச்சித் திட்ட தயாரிப்புப் பற்றியும், 170 பேருக்கு முதலுதவிப் பயிற்சி நெறியும் வழங்கப்பட்டு வருகின்றன.

பயிற்சியாளர்களுக்கு மாதாந்த வேதனத்தினையும் த.பு.கழகத்தினர் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## க.பொ.த (சா/த) பரீட்சை
## சிறந்த பெறுபேறுகள் பெற்றோர்

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் கடந்த 2002 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான பரீட்சை முடிவுகள் வந்துள்ளன.

சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு; பா.மஞ்சுதன் 8ஏ 1பி 1சி, யோ.யோகதீபன் 7ஏ 2பி 1சி, சி.நிரோஜினி 7ஏ 1சி 2எஸ், இ.கௌசிகா 6ஏ 1பி 2சி, வி.சுரோகா 5ஏ 2பி 2சி,கி.அகல்யா 5ஏ 1பி 2சி 01எஸ், சி.தர்சினி 4ஏ 2பி 1சி 2எஸ், க.தனுசா 3ஏ 3சி,ச.மயூரதன் 3ஏ 4பி 1சி 1எஸ்,பா.நவநீதன் 3ஏ 1பி 3சீ 2எஸ்,உ.வினுராஜ் 3ஏ 2பி 3சி 2எஸ், சி.நிரோஜன் 3ஏ 3பி 1சி 1எஸ், க.தனுசா 3ஏ 3சி 2எஸ்.

முள்ளியவளை கலைமகள் வித்தியாலய மாணவர்களில் உ.பிரசாத் 7ஏ 1பி 1சி, யோ.துஸ்யந்தன் 6ஏ 3பி, நா.பிரசாந்தன் 6ஏ 1பி 2சி, த.சுகந்தினி 5ஏ 1பி 3சி, கோ.கீர்த்திகா 4ஏ 2பி 2சி 2எஸ், ப.இளங்கோ 4ஏ 3பி 1சி 1எஸ், சு.டிவீசன் 3ஏ 3பி 2சி 1எஸ்.

கிளி/ முருகானந்தா ம.வி. சி.பிரசாத் 7ஏ பி சி எஸ், யே.விஜயதர்சன் 2ஏ 3பி 2சி 2எஸ், ம.கம்சானந்தன் ஏ 5பி 2சி எஸ், க.ஜனனி 3ஏ 3சி 3எஸ்.

மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் த.தர்மினி 4ஏ 2பி 2சி எஸ், மு.கற்சிலைமடு அ.த.பாடசாலை இ.மைதிலி 2ஏ பி 5சி எஸ். மு/முத்துஐயன் கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை வி.தீபன் 3ஏ 2பி 4சி எஸ். மு/முத்துஐயன்கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலை ம.ஜீவினி 2ஏ 3பி 3சி 2எஸ். (ஆ,05)

## மாணவர்களிடையே புரிந்துணர்வை
## ஏற்படுத்த அ.புரத்தில் ஒன்றுகூடல்

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை முழுவதிலுமுள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் கடந்த 7ஆம், 8ஆம் திகதிகளில் அனுராதபுரத்தில் சகல மாணவர்கள் ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெறறது.

யுனிசெப் நிறுவனத்தின் ஆதரவில் இவ் ஒன்றுகூடல் மேற்படி இரு தினங்கள் நடைபெற்றன.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் போரின் தன்மைகளை அறிந்திராத மாணவர்களுக்குமிடையில் போரின் தாக்கங்களும் அதனால் ஏற்பட்ட கல்விப் பாதிப்புக் குறித்தும் மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றது.

அநுராதபுரம் சர்வோதய மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் வலயரீதியாக 3 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

கிளி. வலயத்திலிருந்து கிளி. இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மூன்று மாணவர்களும், துணுக்காய் வலயம் மல்லாவி ம.வி.யிலிருந்து மூன்று மாணவர்களும் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ, லோ)

### - புத்தாண்டு தினத்தை முன்னிட்டு -
## தமிழீழ விளையாட்டுத்துறை நடத்திய வீதியோட்டத்தில் 50ற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கேற்பு

(அலுவலக செய்தியாளர்)

சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நேற்று தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடத்தப்பட்ட வீதி ஓட்டப் போட்டியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் முதலாம் இடத்தை இ.கெங்காதரன் பெற்றார்.

வீதி ஓட்ட நிகழ்வு மாங்குளம் முகாம் தாக்குதலில் வீரகாவியமான கரும்புலி லெப்.கேணல் போர்க் அவர்களின் நினைவாலயம் அமைந்துள்ள இடத்துக்கு முன்பாக நேற்று காலை 6.15 மணிக்கு ஆரம்பமாகி ஏ-9 வீதியூடாக கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தது. மேற்படி போட்டியை கண்டாவளை விளையாட்டு அதிகாரி ஆனந்தராசா ஆரம்பித்து வைத்தார். தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன், வன்னி விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ராஜா, கிளி. மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தேவன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

காலை 6.15 மணிக்கு ஆரம்பமான மேற்படி போட்டியில் 8.18 மணியளவில் முதலாவது இடத்தைப் பெற்றவர் வெற்றிக்கோட்டை வந்தடைந்தார். போட்டி முடிவுற்றதும் பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது. முதலாம் இடத்தைப் பெற்ற இ.கெங்காதரனுக்கு தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா அவர்கள் ஒரு புத்தம் புதிய கீறோ துவிச்சக்கரவண்டியை வழங்கினார். இரண்டாம் இடத்தைப் பெற்ற வே.லோகரதனுக்கு விளையாட்டுத் துறை அதிகாரி கனகராசா பிளாஸ்ரிக் கதிரைகளை வழங்கினார். மூன்றாமிடத்தைப் பெற்ற இ.இராஜேந்திரனுக்கு கிளிநொச்சி காவல் பணிமனை அதிகாரி ரஞ்சித்தினால் பெற்றோல்மாக்ஸ் பரிசாக வழங்கப்பட்டது. மேலும் பத்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இப்போட்டிகளில் கிளிநொச்சி, முல்லை. மாவட்டங்களில் இருந்து ஐம்பதுக்கு மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். வீதி ஒழுங்குகளை தமிழீழ காவல் துறையினர் மேற்கொண்டனர். (லோ)



முதலாமிடம் பெற்றவர்





இரண்டாமிடம் பெற்றவர்



மூன்றாமிடம் பெற்றவர்

## ஏ-9 வீதி திருத்த வேலை
## எதிர்பார்க்கப்பட்ட அளவில் இல்லை

### வீதி திருத்தம் தொடர்பான கலந்துரையாடலில் தெரிவிப்பு

(வவுனியா)

ஏ-9 வீதி திருத்த வேலைகள் எதிர்பார்த்தளவில் முன்னேற்றம் காணவில்லை என இவ்வீதி தொடர்பான கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

ஏ-9 வீதி திருத்தம் தொடர்பாக வவுனியாவில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட அரச செயலகத்தில் அரச அதிபர் க.கணேஸ் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது. இக்கலந்துரையாடலில் ஏ-9 வீதி புனரமைப்பதற்கான நிதி உதவி வழங்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளான K.M.திலகரட்ண, றெபேட்றிங்கர், உப்புல் கேமபால, ஏ-9 வீதி புனரமைப்புத் திட்டப்பணிப்பாளர், மெய்கண்டான், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு கிழக்கு மாகாணப் பணிப்பாளர் தர்மகுலசிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில் ஏ-9 வீதி திருத்த வேலை முன்னேற்றம் தொடர்பாக பிரதானமாக ஆராயப்பட்டது. ஏ-9 வீதி திருத்த வேலையின் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட அளவில் இல்லை. இதனால் திருத்த வேலையை முன்னேற்ற வேண்டும் எனவும், இவ் வீதி திருத்த வேலைத்திட்டக் காலம் திட்டமிட்டபடி எதிர் வரும் டிசெம்பர் மாதம் முடிவடையும். அது நீடிக்கப்படமாட்டது என்பதால் அதனைக் கவனத்தில் கொண்டு அனைத்து ஒப்பந்தகாரரும் வேலைத்திட்டத்தை உரிய காலத்தில் முடிக்க வேண்டும் எனவும் தீர்மாணிக்கப்பட்டுள்ளது. (10)

### புதுக்குடியிருப்பு செயலர் பிரிவு
## மூன்று சுகாதார நிலையங்கள்
## விரைவில் நிறுவப்படும்

(உடையார்கட்டு)

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட விருப்பதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ. தயானந்தா தெரிவித்துள்ளார்.

சுதந்திரபுரம், விசுவமடு, புதுக்குடியிருப்புப் பகுதிகளில் யுனிசெப்பின் நிதியுதவியுடன் இம்மூன்று நிலையங்களும் அமைக்கப்படவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(19)

## வள்ளிபுனத்தில் கருத்தரங்கு

(உடையார்கட்டு)

வள்ளிபுனம் பகுதியில் தற்போதைய ஆரசியல் நிலைமை தொடர்பான கருத்தரங்கு ஒன்று கடந்தவாரம் இடம்பெற்றுள்ளது.

வள்ளிபுனம் வலயப் பொறுப்பாளர் மயூரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இங்கு கருத்துரையினை புதுக்குடியிருப்புப் பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன் வழங்கினார். (19)

## குளம் திருத்த வேலை விரைவில் ஆரம்பம்

சுதந்திரபுரம் சிரட்டை பறிச்சான் குளத்தின் திருத்த வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.தயானந்தா தெரிவித்துள்ளார்.

நியாப் திட்டத்தின் அனுசரணையுடன் இவ்வேலைகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (19)

### - மட்டு அம்பாறை மாவட்டத்தில் -
## பால் உற்பத்தியை அதிகரிக்க
## பொ.மே நிறுவனம் தீவிர முயற்சி

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பால் உற்பத்தியை அதிகரிக்க பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தீவிர முயற்சியெடுத்துவருவதாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்டப் பொறுப்பாளர் கி.நிசாம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மாட்டுப் பண்ணையாளர்களுக்கென கரடியனாறு மகா வித்தியாலயத்தில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடத்தப்பட்ட விசேட கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இக்கூட்டத்தில் மட்டு அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஷ், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யன் மற்றும் கால்நடை வைத்திய அதிகாரிகள், போதனாசிரியர்கள் கலந்துகொண்டனர்.

# காஷ்மீர் பிரச்சினையில் மூன்றாம் தரப்பு தலையீட்டுக்கு இந்தியா கடும் எதிர்ப்பு!

## - அமெரிக்காவை சாடுகிறார் ஜஸ்வந்த் சின்ஹா

**காஷ்மீர் பிரச்சினையில் மூன்றாவது நாடு தலையிடு வதற்கு இடமில்லையென இந்தியா வலியுறுத்தியுள்ளது. அத்தோடு அமெரிக்கா இரட்டை வேடம் போடுவதாக வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா கண்டனம் தெரிவித்துள்ளார்.**

ஈராக் பிரச்சினை முடிவடைந்த பின்னர் காஷ்மீர் விவகாரமே கையாளப்படுமென அமெரிக்க அதிகாரிகள் அவ்வப்போது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றமை தெரிந்ததே.

இது குறித்து இந்தியா தனது ஆட்சேபத்தை வெளியிட்டுள்ளது. இந் நிலையில் இந்தியா வெளியுறவு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்; அமெரிக்க ஈராக்கை தாக்கியதற்குப் பதிலாக பாகிஸ்தானை அது தாக்கியிருக்க வேண்டும். அமெரிக்கா இரட்டைவேடம் போடுவது கண்டனத்துக்குரியது.

பாகிஸ்தான் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை குவித்து வருவதால் அது உலக சமுதாயத்துக்கே ஓர் அச்சுறுத்தலாக திகழ்கின்றது.


பாகிஸ்தான் அணுவாயுத பரவலில் ஈடுபட்டுள்ளது என்றும் அண்மையில் வடகொரியாவிற்கு ஏவுகணைச் சாதனங்களை வழங்கியதற்காக பாகிஸ்தானின் ஆராய்ச்சி நிறுவனம் மீது அமெரிக்கா தடை விதித்திருப்பது இதற்கு தகுந்த ஆதாரம் என்றும் அவர் குறிப்பிட்டார்.



பாக்தாத்தில் உள்ளூர் நகர வாசிகள் கொள்ளையர்கள் சிலரை ஆயுத முனையில் பிடித்து வைத்துள்ளனர்.



பாக்தாத்தில் வாகன ரயர் ஒன்றை கொள்ளையிட்டு உருட்டிச் செல்லும் ஈராக்கிய பொதுமகன்.



கிர்குக் நகரில் சதாமின் உருவப்படமொன்றை பார்வையிடும் அமெரிக்கப் படைவீரர்.



வாகனத்தில் பொருட்களை ஏற்றிச் செல்லும் ஈராக்கியர்

## தடுப்பு முகாம் அமைப்பு

ஈராக்கின் சாஹர் பகுதியில் போர்க் கைதிகளின் தடுப்பு முகாமொன்றை அமெரிக்க படையினர் அமைத்துள்ளனர்.

இங்கு 6ஆயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மொத்தமாக 20ஆயிரம் பேரை தடுத்து வைக்கும் அளவுக்கு இதுஅமைக்கப்பட்டுள்ளது. விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## தூதரக அதிகாரிகளை ஜகார்த்தா செல்லப் பணிப்பு

(வாஷிங்டன்)

பாதுகாப்புக்கருதி கடந்த அக்டோபர் மாதம் இந்தோனேசியாவிற்கான அமெரிக்கத்தூதரக அதிகாரிகள் தூதரகத்திலிருந்து வெளியேறியிருந்தனர். இவர்களை திரும்பவும் கடமைக்குத் திரும்புமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாலித்தீவில் இடம்பெற்ற பாரியகுண்டுவெடிப்பையடுத்து தூதரக அதிகாரிகளை வெளியேறும்படி அமெரிக்கா உத்தரவிட்டிருந்தது.

அமெரிக்காவின் தற்போதைய அறிவித்தலில் இவர்கள் மட்டும் இந்தோனேசியா செல்லலாம் எனவும், உறவினர்கள் எவரும் செல்லக் கூடாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஐரோப்பாவின் எதிர்காலம் தொடர்பாக 15 நாடுகளின் தலைவர்கள் ஆராய்வு

ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களின் உச்சிமாநாடு இன்று ஆரம்பமாகவுள்ளது. இது இரு நாட்களும் நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் கலந்து கொள்ளும் இவ் உச்சிமாநாடு ஈராக் யுத்தம் ஆரம்பித்த பின்னர் ஆரம்பிக்கப்படவுள்ள முதலாவது மாநாடாகும்.

ஈராக் விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்களும் பிளவுகளும் ஏற்பட்டுள்ள நிலையில் ஐரோப்பிய கண்டத்தின் எதிர்காலம் சனநாயகம் என்பன பற்றி விரிவாக ஆராயப்படவுள்ளன.

ஏனெனில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ள இந்த உச்சி மாநாட்டில் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளின் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## கைக்குண்டு வீச்சில் 6 படையினர் காயம்!

ஈராக்கிய பாராத் துருப்பினர் நேற்று முன்தினம் நடத்திய கிரனைட் குண்டுத் தாக்குதலில் அமெரிக்க படையினர் ஆறுபேர் காயமடைந்துள்ளனர்.

அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பாக்தாத்திற்கு 25 கிலோ மீற்றருக்கு தென்புறமாக அமைந்துள்ள நகர் ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது

## சதாம் அரசைக் கலைக்க சிரியா ஒத்துழைக்க வேண்டும்

### - புஷ் எச்சரிக்கை

(வாஷிங்டன்)

ஈராக்கில் சதாம் ஹூசைன் அரசைக் கலைப்பதில் அமெரிக்காவுடனும் அதன் நேச நாடுகளுடனும் சிரியா ஒத்துழைக்க வேண்டும் என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் எச்சரித்துள்ளார்.

சிரியா இரசாயன ஆயுதங்கள் இல்லை என மறுத்து வருகின்றது.எனினும்அதனிடம் இரசாயன ஆயுதங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கருணாநிதி கைதாவார்; தகவல்களால் பரபரப்பு!

(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதி கைது செய்யப்படவிருப்பதாக வெளியான தகவல்களை அடுத்து பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து தி.மு.க. தொண்டர்கள் நேற்று முன்தினம் கருணாநிதியின் வீட்டின் முன்னால் கூடினர்.

இதேவேளை, தனது தொண்டர்கள் எவரும் தீக்குளிக்கக் கூடாது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமைதியான முறையில் போராட்டங்களை மேற்கொண்டு வரும் தொண்டர்கள் மீது பொலிசார் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டு வருகிறார்கள் என்றும் கருணாநிதி குற்றம்சாட்டியுள்ளார்.

## நடவடிக்கை முடியவில்லை

### - ரொமிபிராங்

ஈராக்கியர்கள் எதிர்ப்பு ஆங்காங்கே காணப்பட்டு வருவதாக அமெரிக்க படைகளின் கட்டளை அதிகாரி ரொமிபிராங் தெரிவித்துள்ளார்.

ஈராக்கியர்களின் எதிர்ப்புக்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படும் வரையில் இராணுவ நடவடிக்கை முடிவடையாது என அவர் மேலும் கூறினார்.

## சி.ஐ.ஏ.யின் அறிக்கை இந்தியாவையும் சாடுகிறது!

ஒருங்கிணைந்த ஏவுகணைத் திட்டத்தை இந்தியா மேற்கொண்டு வருவதாக அமெரிக்க உளவுத்துறை குற்றம் சாட்டியுளளது.

பேரழிவு ஆயுதங்களை வைத்திருத்தல் மற்றும் நவீன பாரம்பரிய ஆயுதங்கள் தொடர்பான அறிக்கையை சி.ஐ.ஏ. அமெரிக்க பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

அந்த அறிக்கையில் ஒருங்கிணைந்த ஏவுகணைத் திட்டத்தை இந்தியா லிபியாவில் மேற்கொண்டு வருகின்றது என்றும் அதற்குரிய ஆதாரங்கள் இருப்பதாக சி.ஐ.ஏ. தெரிவித்துள்ளது.

அத்தோடு சிரியா, வடகொரியா, ஈரான் மற்றும் சீனா போன்ற நாடுகள் ஏவுகணைகளை தயாரித்து வருவதாக சி.ஐ.ஏ. தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.





போருக்கெதிரான ஆர்ப்பாட்ட மொன்றில் ஈடுபடும் மக்கள்.

## இணைய விருப்பம்

(புடாபெஸ்ட்)

ஹங்கேரி ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்ந்து கொள்வதற்கு அந்நாட்டு மக்கள் விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

ஆனால் எண்பது லட்சம் மக்களில் அரை வாசிக்கும் குறைவானவர்களே இந்த அபிப் பிராய வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர்.

ஏறக்குறைய வாக்குகள் யாவும் எண்ணப்பட்ட நிலையில் 84 சதவீத மாணவர்கள் அடுத்த வருடம் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்ந்து கொள்வதற்கு வாக்களித்துள்ளனர்.

# மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்த உதவும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பணி

சிறிலங்கா அரசின் போர் நடவடிக்கையின் போது வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் இராணுவத்தினர் நிலை கொண்டு இருந்து விட்டுச்சென்ற பகுதிகளில் கண்ணி வெடிகளையும் பொறி வெடிகளையும் பெருமளவில் புதைத்து விட்டு, அவர்கள் அவ்விடத்தை விட்டுச் செல்லும் போது அவற்றை அவ்வாறு விட்டுச்சென்றதுடன் எறிகணைகள், ரவைகள் என்று வெடிக்கும் நிலையிலும் சில வெடிபொருட்களையும் அவ்வவ் இடங்களில் விட்டுச்சென்றுள்ளனர்.

இதனால், தமது சொந்த வாழ்விடங்களில் மீள்குடியமர்விற்காகச் சென்ற மக்கள் சிலர் தமது அவயவங்களை இழந்தனர். சிலர் உயிரையும் இழந்துள்ளனர்.

இதனைக் கருத்திற் கொண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் மனிதாபிமானப் பணிகளில் ஒன்றாகச் செயற்படும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இவ் அமைப்பானது, வன்னிப் பிராந்தியத்தில் மனிதாபிமான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிக்காக 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உருவாக்கப்பட்டது.



விசேட பயிற்சி பெற்ற அணியினர்

ஆரம்பத்தில் 150 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் அமைப்பில் 130 பேர் கண்ணிவெடி அகற்றும் பணிக்காகவும் ஏனையோர் முதலுதவியாளர் கள், செலுத்துனர் (வாகனம்) போன்ற இதர பணிகளுக்கும் அமர்த்தப்பட்டனர்.



செயலிழக்கப்பட்ட மிதிவெடிகள்

இவர்களுக்கான, கொடுப்பனவுகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கி வந்தது. அத்தோடு கண்ணிவெடியகற்றுதல் தொடர்பான பயிற்சியினை, தமிழீழ விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிப் பிரிவு வழங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பணியில் ஈடுபட்டிருந்த அணிகள் மூன்று வருட காலப்பகுதிகளில் எந்தவிதமான அடிப்படை வசதிகளுமின்றித் தமது செயற்பாடுகளைச் செவ்வனே செய்து வந்த இம்மூன்று வருட காலப்பகுதியில் எதுவித வசதிகளுமில்லாத நிலையில் 82,000 நிலக்கண்ணி வெடிகளையும் 62,000 வெடி பொருட்களையும் வன்னியின் பல பகுதிகளில் இருந்து மீட்டெடுத்து அவற்றை உரிய முறையில் தகர்த்தழித்துள்ளனர்.

இவ்வாறு இக்காலப் பகுதியில் அளப்பரிய பணியில் செயற்பட்ட மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவில் கடமை புரிந்த லிங்கம் என்ற பணியாளர் வெடி விபத்தில் உயிரிழந்ததுடன் மேலும் கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த மதியழகன், சதீஸ்குமார் ஆகிய இரண்டு பேர் தமது அவயவங்களை இழந்துள்ளனர்.


இதைவிட கடமையின் போது சிவஞானகரன் என்பவர் பாம்புக் கடிக்கு இலக்காகி சேவையின் போது உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது எச்.டி.யு (HDU) என்ற மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவில் ஆளணி 300 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதோடு வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் எட்டி வருகின்றதோடு எச்.டி.யுவின் நிர்வாகக் கட்டுமானங்களையும் ஒழுங்கமைப்புக்களையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வருகின்றது. உதவி வழங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களான என்.பி.ஏ (N.P.A), மைக்(M.A.G),எவ்.எஸ்.டி(F.S.D) ஆகிய நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இதற்கான நிதியுதவியினை நோர்வே, ஜப்பான்,சுவிஸ் போன்ற நாடுகளும் ECHOஎன்ற அமைப்பும் வழங்கி வருகின்றது. இந்நிறுவனங்களின் பெரும் பங்கினால் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் மனிதாபிமான நடவடிக்கைகள் விரிவாக்கம் பெறுவதுடன் சர்வதேச ரீதியில் உயர்நிலை பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பணிகள் பற்றி நோக்குமிடத்து இராணுவம் விட்டுச்சென்ற கண்ணிவெடி வயல்களை இனங்கண்டு அவற்றை அடையாளப் படுத்தி பாதுகாப்பு வேலிகளை அமைப்பதோடு எச்சரிக்கைப் பதாகைகள் இடப்பட்டு அதற்குப் பின்னர் கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் அகற்றும் பணி ஆரம்பிக்கப்படும். அகற்றப்பட்ட வெடிபொருட்களை உரிய முறையில் தகர்த்தழிக்கப் பட்ட பின்னர் கண்ணிவெடி அகற்றியமை உறுதிப் படுத்தப்பட்டு மக்களிடம் கையளிக்கப்படும்.

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் இவ்வருடம் சோரன் பற்று, தர்மக்கேணி, அம்பகாமம், மாங்குளம், ஒலுமடு, தச்சடம்பன், ஒட்டுசுட்டான், வித்தியாபுரம், பழம்பாசி, வன்னிவிளாங்குளம், பெரியகுளம், மூன்று முறிப்பு கிடாப்பிடித்தகுளம், இளமடுதன்குளம், சிறாட்டிகுளம், பனங்காமம், பள்ளிக்குடா, ஞானிமடம் பாலைப்பாணி, புதூர் முத்துமாரிநகர், உமையாள்புரம், குமரபுரம், கரைச்சி வடக்கு காஞ்சிபுரம், பூங்காவனம் ஆகிய இடங்களில் வெடிபொருட்கள் இனங்காணப்பட்டு இவ்வருடம் முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ளது.



மீட்கப்பட்ட ஒருதொகுதி வெடிபொருட்கள்

எதிர்காலத்தில் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவில் மேலும் 300 பேரை புதிதாக இணைப்பதோடு சர்வதேச மட்டப்பயிற்சிகள் வழங்கவுள்ளது. அத்துடன் யாழ்.குடாநாட்டிலும் இப்பணி விஸ்தரிக்க எண்ணியுள்ளது. இப்பணியில் மகளிர் அணியையும் அது உருவாக்கவுள்ளது. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு அமைப்புக்களின் உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்கும் பட்சத்தில்

சு.பாஸ்கரன்

இத்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தக் கூடிய வலு மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினிடம் உள்ளது.

இதேவேளை இவர்களின் பணியினால் வன்னிப்பிரதேசத்தில் வெடிபொருட்களால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு வெகுவாகக் குறைந்துள்ளது.

வன்னிப் பிரதேசத்தில் 1999ஆம் ஆண்டில் 182 வெடிவிபத்துக்களும், 2000ஆம் ஆண்டு 119 வெடிவிபத்துக்களும், 2001ஆம் ஆண்டு 31 விபத்துக்களும்இடம்பெற்றுள்ளன. NPA மற்றும் MAG ஆகிய வற்றின் ஒத்துழைப்புக்களுடன் மனிதநேயக்கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் ஆற்றிவரும் அர்ப்பணிப்புடனான சேவையினால் கண்ணிவெடி மற்றும் வெடிபொருட்களினாலும் பொதுமக்களுக்கு ஏற்படும் ஆபத்து 12.6 வீதத்திற்கும் கீழாக குறைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஐக்கிய நாடுகள் உதவித்திட்ட நிறுவனப் பிரதிநிதிகளுக்கும், தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரதிநிதிகளுக்கும், ஐ.நா. உதவித்திட்ட நிறுவனத்தின் கண்ணிவெடி செயற்பாட்டிற்கான யாழ்.அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் ஐ.நா.அபிவிருத்தித் திட்டப் பிரதிநிதிகளால் யாழ். மாவட்டத்தில் கண்ணிவெடி பற்றிய செயற்பாடு தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. ஐ.நா. அபிவிருத்தித்திட்டப் பிரதிநிதிகளிடம் சிறிலங்கா இராணுத்தினரால் இராணுவ மிதிவெடி வயல்களில் இரு தொகுதி வரைபடங்களும் ஒப்படைக்கப்பட்டன. அத்துடன் எதிர்காலத்தில் செய்திப் பரிமாற்ற ஒத்துழைப்பிலும் ஈடுபடுவதென ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

ஆனால் படைத்தரப்பினால் வழங்கப்பட்ட வரைபடங்கள் எவ்விதபயனும் அளிக்கவில்லை என மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு அதிருப்தி தெரிவித்துள்ளது.

என்.பி.ஏ. என்ற நிறுவனம் அதாவது நோர்வேஜியன் பீப்பிள் எயிட் என்ற நிறுவனம் எக்கோ அமைப்பின் நிதியுதவியுடன் கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கு சர்வதேச தரத்திலான முயற்சிகளை வழங்குவதோடு கண்ணிவெடி அகற்றுபவர்களுக்குப் பாதுகாப்பு மேலங்கிகளையும் தலைக் கவசங்களையும் வழங்கியுள்ளதோடு தற்போதைய பணிகளில் விபத்துக்களும் உயிரிழப்புக்களும் தவிர்க்கப்பட்டுள்ளது.

கடந்தகாலப் பணியின்போது ஏற்பட்ட விபத்துக்களில் காயமடைந்த மூன்று கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களையும் கொழும்பிற்கு அழைத்துச்சென்று சிகிச்சை வழங்கும் பொறுப்பை ஏற்றுள்ளது.

இவ்வாறு மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் அர்ப்பணிப்புக்கள் மூலம் தமிழர் தாயகத்தில் மக்கள் மீள்குடியேற்றம் விரைவுபடுத்தப்படுவதுடன் ஒரு வளமான கட்டுமானத்தையும் ஏற்படுத்த முடியும்.

மனிதாபிமான அடிப்படையில் செயற்ப்பட்டு வரும் இவ்அமைப்பினரால் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2001 ஆம் ஆண்டு வரைக்கும் 1,44,628 வெடிபொருட்களும், 2002 ஜனவரி மாதம் 3,183, பெப்ரவரி மாதம் 3,277, மார்ச் மாதம் 3,418 வெடிபொருட்களும், ஏப்ரல் மாதம் 3,902 வெடிபொருட்களும், மே மாதம் 4,253 வெடிபொருட்களும் யூன் மாதம் 59 வெடிபொருட்களும், யூலை மாதம் 105 வெடிபொருட்களும் ஆகஸ்ட் மாதம் 66 வெடிபொருட்களும், செப்டம்பர் மாதம் 230 வெடிபொருட்களும், ஒக்டோபர் மாதம் 1385 வெடிபொருட்களும், நவம்பர் மாதம் 1086 வெடிபொருட்களும், டிசம்பர் மாதம் 2900 வெடிபொருட்களும் கடந்த வருடம் வரை மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. □

# கணினியால் தோற்றுவிக்கப்படும் இரு கனவுலகம்

அறிவியல் உலகில்

கணினிகளால் மெய்போலத் தோற்ற மளிக்கும் பொய்யான காட்சிகளைத் தோற்று விக்க முடியும்; அதாவது ஒரு கனவுலகைத் தோற்றுவிக்க முடியும். மனிதன் காணும் கனவுகள் எவ்வாறு உண்மை போல தோற்ற மளிக்குமோ அதே போல இங்கு கணினியால் உருவாக்கப்படும் காட்சிகளும் உண்மை போலத் தோற்றமளிக்கும். அத்துடன் கனவில் காணும் காட்சிகளில் கனவுகாண்பவரே இடம்பெறுவதுபோல கணினியால் உருவாக் கப்படும் காட்சிகளில் கணினியை இயக்கு பவரும் இடம்பெறமுடியும். இதனைத் தமிழில் “பொய் மெய்மை” என அழைக்கின்றனர். **“Virtual reality”** (வீர்ச்சுவல் றியாலிற்றி) என இதனை ஆங்கிலத்தில் அழைப்பர்.

1989இல் வி.பி.எல் ஆராய்ச்சி நிறுவன த்தைச் சேர்ந்த ஜேரன் லானியர் என்பவர் இந்தப் “பொய் மெய்மை” என்னும் விடயத்தை வெளிப்படுத்தினார்.

இதில் காட்சிகள் முப்பரிமாணவடிவத்திலே தோற்மளிக்கின்றன. அதாவது நாம் ஒரு புகைப்படத்தைப் பார்த்தோமானால் அது நீளம், அகலம் ஆகிய இரு பரிமாணங்களை மட்டும் கொண்டதாக - தட்டையானதாகவே காணப் படும். ஆனால் முப்பரிமாணம் என்பது நீளம், அகலம், ஆழம் (அல்லது தூரம்) என்ற மூன்று பரிமானங்களைக் கொண்டதாக இருக்கும். அதாவது நாம் சாதாரணமாகக் காணும் காட்சிகள் இம் மூன்று பரிமானங் களையும் கொண்டவையாகவே இருக்கின்றன. எனவே விர்சுவல் றியாலிற்றியில் நாம் ஒரு காட்சியைக் காணும்போது நாம் நேரடியாகப் பார்ப்பது போன்ற தோற்றமே எமக்குக் காட்சி தரும்.

அது மட்டுமல்லாது - நாம் காட்சிகளை காண்பதோடு மட்டுமல்லாது அக்காட்சிக்குரிய சம்பவத்தில் நாமே நேரடியாகப், பங்கு கொள்வது போன்ற உணர்வையும் பெற முடியும் என்பது தான் வீர்ச்சுவல் றியற்றியின் அதிசயமான விடயமாகும். அதுவே நாம் கனவுலகில் வாழ்வது போன்ற தோற்ற மளிக்கக் காரணமாகின்றது. இது எவ்வாறு ஏற்படுகிறது? எனப் பார்ப்போம்.

வீர்ச்சுவல் றியாலிற்றியைப் பயன்படுத்து பவர் கணினிக்கு முன்னால் அமர்ந்திருக்கும் போது அவர் இருக்கும்மிடத்தின் தூரம் அவர் அமர்ந்திருக்கும் கோணம் என்பவற்றை கணினி துல்லியமாகக் கணித்துக் கொண்டு அதற்கு ஏற்றவாறு காட்சிகளைக் கணினி மாற்றிய மைத்துக் கொள்கிறது. இதனால் பயன்படுத்துபவர் தான் காணும் காட்சிகள் அனைத்தும் உண்மை என்றே நம்பிக்கொள் வார். அத்துடன் கணினியை இயக்குபவர்தான் விரும்பியபடி காட்சியை மாற்றிக்கொள்ள முடியும் அதாவது பொய்மெய்மை உலகின் பூங்கா ஒன்றுக்குள் நுழையும் ஒருவர் அங்குள்ள இருக்கையொன்றை தான் விரும் பிய இடத்திற்கு மாற்றிப் போட்டுக்கொள்ள முடியும் உதை பந்தாட்டமைதானத்திற்குள் நுழையும் ஒருவர் பிரபலமான உதைபந்தாட வீரர்களுடன் விளையாடுவதற்கு முடியும். இதனால் இந்த வீர்சுவல் றியாலிற்றியில் ஈடுபடும் ஒருவர் மாயமான காட்சிகளில் முற்றாக ஆழ்ந்துவிடும் நிலை ஏற்படுகின்றது.

இந்த வீர்ச்சுவல் ரியாலிற்றி எவ்வாறு இயக்கச் செய்யப்படுகிறது. அனேகமாக இக்கருவி ஒருவரின் கைகளால் இயக்கப் படுகின்றது கைகளின் ஒவ்வொரு விரலிலும் பைவர் ஒப்டிக் எனப்படும் ஒளியை உணரும் நூல்கள் கொண்ட கையுறைகள் அமைக்கப் பட்டு இயக்குபவருக்கு இக் கையுறைகள் அணிவிக்கபடுகின்றன. கைகள் மடக்கப்பட்டு விரிக்கப்படும்போது பைவர் ஒப்டிக்கில் படும் ஒளியின் அளவைக் கணினி கணிப்பிட்டு பொய்வெளியில் காட்சிகளை மாற்றுகிறது. இதனைவிட வேறு விதமான முறைகளும் இங்கு உள்ளன.

இதேபோல ஒலியையும் காட்சிக்கு ஏற்ப மாற்றி அமைக்கமுடியும். அதாவது நாம் காணும் காட்சியில் மணி ஒலி எழுப்பப் படுகின்றது. என வைத்துக்கொள்வோம். அப்போது மணி எம்மிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறதோ அதற்கேற்ப ஒலியின் அளவு மாறுபட்டு உண்மையிலேயே அம்மணியிலிருந்து தான் ஒலி எமக்கு கேட்பது போன்ற தோற்றம் உருவாக்கப்படுகிறது.

அடுத்ததாக வீர்ச்சுவல் றியாலிற்றியில் பார்க்கும் பொருளொன்றைத் தொடமுடியும். இது காட்சி முற்றுமுழுதாக உண்மை என்று நம்பவைத்துவிடுகிறது. வீர்ச்சுவல் றியாலிற்றியைப் பயன்படுத்தும் ஒருவர் ஒருபொருளைத்தொட கையை நீட்டும் போது கையுறையூடாகப் பாயும் மின்சாரம் பொருளை தொடுவதற்கு வசதியாக அருகே கொண்டு வருவதுடன் அதிர்வு அலையொன்றை ஏற்படுத்தி அதனைத் தொடுவது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.



இவ்வாறு உண்மை போலத் தெரியும் மாயத்தோற்றம் ஒன்றை உருவாக்குவது மிகவும் செலவு கூடிய விடயமாகும். சர்தார்ண்மாக எல்லோராலும் இத்தகைய சாதனங்கள் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றைப் பெற்றுவிட முடியாது.

இப்பொழுது கணினித்திரைகளில் கனவுலகைக் காட்சிகளைப் பிரப்பதற்குப் பதிலாக தலையில் பொருத்தப்படும் விசேட கருவி மூலம் முப்பரிமாணத்தில் கனவுலகிலேயே சஞ்சரிக்கவைக்கும் பல விதமான கருவிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவை மேலும் செலவு கூடியவை யாகும். எனினும் இவை பயன்பாட்டில் இருக்கின்றன.

இவை பொதுவாக எவ்வாறு பயன் படுத்தப்படுகின்றன? இக் கருவிகள் கடினமான சில பயிற்சிகளைப் பெறமுன் அவை குறித்து காட்சியாகவே அறிந்து கொள்ளப்படுகின்றன. உதாரணமாக குண்டுவீச்சு விமானம் ஒன்றைச் செலுத்தப் பழகுவதற்கு முன், விண்வெளி ஓடமொன்றில் பயணிப்பது தொடர்பாக, அணுக்கதிர் வீச்சு ஏற்படுமாயின் எவ்வாறு விளைவுகள் இருக்கும் என்பதை அறிந்து கொள்ளப்பயன்படும். அதாவது இவற்றை கற்பனை உலகில் பார்வையிட்டு பிரச்சினைகள், ஆபத்துகளை முன்கூட்டியே கனவுலகில் அனுபவித்து அறிந்து பின்னர் உண்மை உலகிற்குச் செல்ல செலவு குறைந்த முறையாகும்.

அடுத்ததாக ஒரு பாரிய தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் போது எழக்கூடிய பிரச்சினைகளை இலகுவாக இதன் மூலம் தீர்க்கலாம். உதாரணமாக பாரிய தொழிற் சாலையொன்றுக்கான கட்டட வேலை ஆரம்பி க்கு முன் அக்கட்டங்களுக்குள் வைக்க வேண்டிய இயந்திரங்களை எவ்வாறு உள்ளே எடுத்துச் செல்வது இயந்திரங்களை எங்கு வைப்பது, பாதுகாப்பு, இடவசதிகள் போன்ற பிரச்சினைகளை முன்கூட்டியே இப்பொய்த் தோற்றத்தின் மூலம் அறிந்து கொண்டால் பின்னால் எழக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். ஒருவர் ஒரு வீட்டை அமைக்கத்திட்டமிடுகிறார் எனில் அந்த வீட்டைக் கட்ட முன்பே கற்பனை வீட்டிற்குள் நுழைந்து ஏதாவது மாற்றங்கள் செய்ய வேண்டுமாயின் செய்து கொள்ளலாம்.

ஒரு பொருளை வடிவமைப்பவர் அப்பொருளைத் தயாரிக்கு முன்பே அதன் குறை நிறைகளை அறிந்துகொள்ளலாம்.

இதனைவிட பொழுதுபோக்கு சாதனமாக கற்பனை உலகில் வாழ விரும்புவோருக்கு (அவர் பணம் படைத்தவராக இருந்தால்) இது ஒரு வரப்பிரசாதமாகும். உதாரணமாக நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளை வளர்க்க பலருக்கு விருப்பம், சிலர் விருப்பமிருந்தாலும் அவற்றின் சில நடவடிக்கைகளை அவர்களால் தாங்க முடியாது. அவ்வாறானவர்கள் வீர்ச் சுவல் றியாலிற்றியில் அவற்றை வளர்க்கலாம்.

ஆனால், இந்த மாய உலகு பலருக்கு எட்டுவது தற்போதைக்கு கடினமே எதிர் காலத்தில் சாத்தியமாகலாம் என்பதையும் மறுக்கமுடியாது.

சிவபாலன்

## முல்லைத்தீவு அரச அதிபர் பணிமனை புனரமைப்புக்கு 250 மில்.ரூபா ஒதுக்கீடு

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனை புனரமைப் புக்காக சிறிலங்கா அரசினால் 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நகரை 1990ஆம் ஆண்டு கடற்காற்று இராணுவ நடவடிக்கை மூலம் சிறிலங்கா இராணுவம் முற்றாக ஆக்கிரமித்து அப்பகுதி அரச, அரசசார்பற்ற திணைக்களங்கள் வீடுகள் என்பன அழிக்கப்பட்டிருந்தன. அவ்வேளை அங்கிருந்து இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பணிமனையில் இயங்கிவந்த முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனை இவ்வாண்டு முற் பகுதியில் அழிவுக்குள்ளான கட்டடங்களை ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியுடன் தற்காலிக மாக புனரமைத்து மீண்டும் முல்லைத்தீவு நகரப்பகுதியில் இயங்க ஆரம்பித்தது. போதிய கட்டட வசதியோ ஏனைய வசதிக ளோ அற்ற நிலையில் பல நெருக்கடிகளுக்குள் இயங்கிவரும் அரசாங்க அதிபர் பணிமனையை மேலும் நிரந்தர புனரமைப்புககாக சிறிலங்கா அரசு 250 மில்லியன் நிதியினை ஒதுக்கியுள்ளதாக முல்லை நகர புனரமைப்புக் குழுவிடம் முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். (ஆ)

## மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு ‘நிக்கொட்’டின் 3ஆம் கட்ட கொடுப்பனவு

(அலுவலக செய்தியாளர்)

மீளக்குடியமர்ந்து வரும் மக்களுக்கு 'நிக்கொட்' நிறுவனத்தினால் மூன்றாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இக் கொடுப்பனவிற்கென 10 மில்லியன் ரூபாய் வந்துள்ளதாகவும் விரைவில் 400 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில சித்தன் குறிச்சி, செட்டியகுறிச்சி, கறுக்காய்த்தீவு, ஞானி மடம், வில்லடி பரமன் கிராய், வெட்டுக்காடு, நெற்புலவு, மட்டுவில் நாடு, முளவன் குறிச்சியும் கரைச்சி உதவி அரச அதிபர் பிரிவில் மருத நகர், விவேகானந்த நகர் என்பவும் பளைப் பிரதேச உதவி அரச அதிபர் பிரிவில் கொற்றாண்டல் குளம், இயக்கச்சி ஆகிய கிராமங் களின் மீள்குடியமர்ந்தோர் மூன்றாம் கட்ட கொடுப்பனவிற்குத் தெரிவாகியுள்ளன என' நிக்கொட்' நிறுவன கணக்காளர் தெரிவித்தார். (அ)

## முள்ளியவளையில் நடைபெற்ற வீரமுரசு மாத அரங்கு

முள்ளியவளைப் பிரதேசத்தில் மாதம் ஒருமுறை வலம் வரும் வீரமுரசு கலை நிகழ்வுகள் அண்மையில் முள்ளியவளை வலயத்தில் முள்ளியவளை கோட்ட தேசிய எழுச்சி பேரவையின் ஒழுங் குபடுத்தலில் முள்ளியவளை தமிழ் வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை முள்ளியவளைக் கலைமகள் வித்தியாலய உபஅதிபர் ஏற்றிவைக்க, அலங்கரித்து வைக்கப் பட்டிருந்த தியாகி அன்னை பூபதி யின் திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரினை லெப் சதா, வீரவேங்கை நாகண்ணன் ஆகிய மாவீரர்களின் தாயார் சி. சரஸ்வதி ஏற்றிவைத்து மலர்மாலை அணிவித்ததை யடுத்து முள்ளியவளை தமிழ் வித்தியாலய அதிபர் சு. வீரசிங்கம் தலைமை யில் நிகழ்வுகள் இடம்பெற்றன.(ஆ)

## சீர்கெட்ட பாதையால் விபத்துக்கள் நேர்டுகின்றன!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட சிறிய பாலத்தின் அருகாக போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. இதனால் விபத்துக்களும் இடம் பெற்று வருகின்றன.

மழைகாலத்தில் வீதியை குறுக்கறுத்து நீர் பாய்வதை கருத்தில் கொண்டு சிறிய பாலம் ஒன்று அமைக்கப்பட்டதாயினும் தற்போது அதனை எவரும் பயன் படுத்துவதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் பாலத்தின் அருகாக உள்ள நீர் வெளியேறு வதற்காக ஏற்கனவே அமைக்கப் பட்ட பகுதியால் மக்கள் போக்கு வரத்தை மேற்கொள்கின்றனர் இது மிக மோசமாக சேதமடைந்துள்ள தால் அவ்வப்போது விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன. (அ)

## அன்னை நினைவாக சிரமதானம்

(அலுவலக செய்தியாளர்)

தியாகி அன்னை பூபதியின் 15ஆவது ஆண்டு நினைவு நிறைவினை முன்னிட்டு நினைவு நிகழ்வினை சிறப்புறக் கொண்டாடுவதற்கான நடவடிக்கைகள் மாவட்ட பிரதேச மட்டங்களில மேற்கொண்டு வருகின்றன.

கிளிநொச்சி பலகலைக்கழக புதுமுகமாணவர் ஒன்றிய மாணவர்களினால அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு கிளி நகரப் பகுதி வீதியருகாமையில இருந்த புல் பூண்டுகள் நேற்று முன்தினம் சிரமதானப் பணிமூலம் துப்பரவு செய்யப்பெற்று அகற்றப் பட்டது.

கடந்த சனியன்று திருநகர் சுரபி முன் பள்ளிவளாகத்தில் அககிராம மக்களினால் சிரமதானப் பணி மூலம் துப்பரவு வேலைகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(சோ.ஜோ)

## பயிற்சி வகுப்பு

மலேரியா நோயின் தாக்கத்தை மேலும் குறைப்பதற்காக மலேரியாத் தடைப்பகுதி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி செயல் வகுப்புக்கள் முல்லை. மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடந்த 07ஆம் திகதி தொடககம் 10ஆம் திகதி வரை நடைபெற்றது.

விரிவுரைகளை மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் து.வி.ஜெயகுலராஜா. பூச்சியியல் உதவியாளர் இராஜதுரை, முல்லை மாவட்டநதிர்கட்டட பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் நிகழ்தினர்.

# ஜீ.ரீ.சற் நிறுவனம் கல்வி மேம்பாட்டிற்கு தொடர்ந்து உதவி புரிய நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

**ஜீ.ரீ.சற் என்ற ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் தனது செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளது. இவ்வாண்டு மட்டுமல்லாது இனிவரும் காலங்களிலும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள பின்தங்கிய பாடசாலைகளை இனங்கண்டு அவற்றின் கல்விநிலையை மேம்படுத்தவுள்ளது.**

வன்னிப்பகுதியில் பின்தங்கிய பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு ஜீ.ரீ.சற். என்ற ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் உதவிவருகின்றமை தெரிந்ததே.

வன்னியின் கல்வியில் வீழ்ச்சி நிலை காணப்படுகின்றமையால் அதனை வளப்படுத்தும் பொருட்டு வன்னியில் உள்ள கிளிநொச்சி கல்விவலயம் மற்றும் துணுக்காய், முல்லைத்தீவு, மடு, வவுனியா வடக்குக் கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து தரம் மூன்று தொடக்கம் ஐந்து வரையான 14000 இற்கும் மேற்பட்ட மாணவர்களை தமிழீழ கல்விக்கழகமூடாக இனங்கண்டு கல்வியை மேம்படுத்தும் பொருட்டு பாடரீதியான பின்னடைவுகளையும் மேம்படுத்திக்கொள்வதற்காக பாடசாலைக் கற்பித்தல் நேரத்தைவிட மேலதிக நேரத்தை ஒதுக்கி இக்கற்றல் செயற்பாடுகளில் மாணவர்களை ஆர்வப்படுத்தும் பொருட்டு போசாக்கு உணவுகளையும் வழங்கி வருகின்றது.

அத்தோடு மேலதிக கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கும் மேலதிக கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றது. இந்நிறுவனம் இங்குள்ள பிரச்சினைகளை இங்குள்ளவர்கள் மூலம் இனங்கண்டு அவர்கள் மூலம் தீர்த்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

# யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி பிராந்திய இரத்த வங்கியாக மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கி நவீன வசதிகளைக் கொண்ட பிராந்திய இரத்த வங்கியாக மாற்றியமைக்கப்படவுள்ளது என்று இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி வைத்தியர் இ-சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

மந்திகை, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மருத்துவமனைகளின் இரத்த வங்கிகளுக்குத் தேவையான இரத்தத்தை வழங்குவதுடன் இந்த வங்கிகளிலிருந்து கிடைக்கும் மாதிரிகளை பரிசோதனைக்குட்படுத்தி பெறுபேறுகள் பற்றி உடனடியாக அந்தந்தவைத்திய சாலைகளுக்கு பக்ஸ் மூலம் அறிவித்தல் போன்ற பணிகளையும் இரத்த வங்கி ஈடுபடவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அத்துடன் இதற்கான நடவடிக்கைகளை தேசிய இரத்த மாற்றும் பிரயோகசபை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# வடமராட்சி கிழக்கு இராணுவக்கட்டுப்பாட்டு பகுதிக்குள் முன்பள்ளிகளை நிறுவ ஏற்பாடு

(வடமராட்சிகிழக்கு)

வடமராட்சி கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் முன்பள்ளிகளை அமைக்க தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள கிராமங்களான மணற்காடு, விளாங்காடு, குடத்தனை, நடுக்குடத்தனை, பொற்பதி, அம்பன் ஆகியவற்றில் போதியளவு முன்பள்ளிகள் இல்லை.

இதனை கருத்திலெடுத்து விரைவில்தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிவர்த்திசெய்யவுள்ளது என தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யாழ் மாவட்டப் பணிப்பாளர் வரன் நேற்று முன்தினம் மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் வடமராட்சி கிழக்கு கல்விக்கழகத் பொறுப்பாளருக்குத் தெரிவித்தார். (11)

## ஆபத்தான மின் வழங்கலால் மக்களிடையே அச்சம்!

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் பாதுகாப்பற்ற மின் விநியோக நடைமுறையால் மக்கள் வீதிகளில் போக்குவரத்தை மேற்கொள்ள அச்சமடைகின்றனர்.

வீதியோரமாக மின் கம்பிகளைத் தாங்கி நிற்கும் கம்பங்கள் பல உக்கிய நிலையிலும் சாய்ந்த நிலையிலும் காணப்படுகின்றன. இதனால் பயணம் செய்வோர் எப்போது சரிந்து விழுமோ அல்லது மின்சாரம் தாக்கி விடுமோ என்று அஞ்சுகின்றனர்.

மின் கம்பமொன்று அண்மையில் சரிந்து வீழ்ந்ததில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் ஒருவன் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (12)

## 5343 பேர் சிகிச்சை

முள்ளியவளை அரசினர் வைத்திய சாலையில் கடந்த பங்குனி மாதம் 5343 நோயாளர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலையின் பங்குனிமாத நிலவர அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் விபரமாகத் தெரிவிக்கையில் வெளிநோயாளர் பிரிவில் 3628 நோயாளர் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் சாதாரண காச்சலினால் 882 பேரும் சிரங்கு நோயினால் 413 பேரும் குருதிச் சோகைக்காக 257 பேரும் மலேரியாக்காய்ச்சலுக்காக 73பேரும் சிறு சத்திர சிகிச்சைக்காக 14 பேரும் வயிற்றோட்டத்தினால் 16பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர். இதே வேளை முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையின் மகப்பேற்று மனையில் கடந்த மாதம் மகப்பேற்றுக்காக 40 கற்பிணித்தாய்மார்கள் அனுமதிக்கப்பட்டு 21 சிசு பிறப்பு நிகழ்ந்துள்ளதாகவும் அவ் அறிக்கை தெரியப்படுத்தியுள்ளது.

# முறைசாராக் கல்வியின் கீழ் கணினிப் பயிற்சி நெறி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கல்வி வலய முறைசாராக்கல்விப் பிரிவின் கீழ் கணினிப் பயிற்சிநெறி கடந்த 3ஆம் திகதி கிளிநொச்சி முருகானந்தா ம.வி.யில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செ. சின்னத்துரை முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பயிற்சிநெறியினை ஆரம்பித்து வைத்தார்.

மேற்படி பயிற்சியில் 35 மாணவர்கள் கலந்து கணினிப்பயிற்சி பெற்று வருகின்றனர். (சோ)


**வருடாந்த சித்திரை பௌர்ணமி விழா**

மாங்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள அம்பகாமம் அருள்மிகு மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த சித்திரை பௌர்ணமி விழா 16.04.2003 ஆம் திகதி வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்

2830


## குடிநீர் வழங்க 12.5 மில். தேவை

சாவகச்சேரி நகரசபையால் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் விநியோகத்திட்டத்தை மீள ஆரம்பிக்க 12.5 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

18 பொதுக் கிணறுகளை புனரமைக்க 1.15 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் குழாய் மூலம் குடிநீர் வழங்க 11 மில்லியன் ரூபா தேவையெனவும் மதிப்பிடப் பட்டுள்ளது.

# லைப். நிதி வெற்றிக்கேடயத்திற்கான உதைபந்தாட்டப் போட்டிகள்

சிங்கராஜா ஜெயப்பிரகாஷ் (லைப்.நிதி) ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரை நடைபெற வுள்ளது. கிளி. உதைபந்தாட்ட லீக்கினால்19வயது மற்றும் 15 வயது பிரிவினருக்கான பாடசாலைகளுக் கிடையே நடாத்தப்படவுள்ள இப் போட்டியில் வட்டக்கச்சி ம.வி, கிளி. மத்திய கல்லூரி, கிளி. இந்துக்கல்லூரி, கிளி மகா வித்தியாலயம்,கிளி. புனித பற்றிமா றோ.க.வித்தியாலயம், கிளி. சிவநகர் அ.த.க. பாடசாலை உருத்திரபுரம் ம.வி. ஆகிய ஏழு அணிகள் பங்கு பற்றவுள்ளன.இப்போட்டியில் பங்கு பற்றவுள்ள அனைத்து அணிகளையும் 21ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கிளி. உருத்திரபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் சமுகளிக்குமாறு கிளி. உதைபந்தாட்ட லீக் செயலர் சு.கனகராசா வேண்டுகை விடுத் துள்ளார். (சோ)


**1ஆம் ஆண்டு நினைவில்....**

மண்ணில் 1964 . 05 . 26



விண்ணில் 21 . 04 . 2002

**இ.கைலேஸ்வரி (வசந்தா)**

*காலனவன் கவர்ந்ததை கனவென்று கருதிவிட காலம் கனக்கும்போது ஓராண்டு சென்றதம்மா! உன் நினைவுகள் எங்ஙனமும் உறைந்து எம்மை வழிநடத்தும்.*

*அன்புத் தெய்வமே! உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.*

*உன்பிரிவால் வாடும்,*

*கணவன், பிள்ளைகள், உற்றார், உறவினர், தம்பிமார், தங்கைமார், மருமக்கள்.*

தகவல்:

சூ.இருதயா, வற்றாப்பளை.

இலங்கேஸ்வரன், வற்றாப்பளை

(2835)



**நான்காம் ஆண்டிலும் உன்னுடன்....**

அன்னையின் மடியில் 14 - 08 - 1993



ஆண்டவன் திருவடியில் 15 - 04 - 1999

**துரைநாயகம் - பிருதுகா (பிரு)**

ஆண்டுகள் ஆனதுநான்கு
ஆறிடுமோ துயர் என்றும்
மகளே என்று விழித்திடவும்
தங்கையே என்று அழைத்திடவும்
துடிக்குதம்மா ஆசை
ஆனாலும் அணைக்க முடியவில்லை
முல்லையே
முத்தம் தந்து முற்றம் நின்று வழியனுப்பினோம்
பிஞ்சு என்று தெரிந்தும் பிரித்துவிட்டான்
இறைவன்
காலங்கள் மாறும் போதும்
மாறாதம்மா உன் நினைவு...

*உனது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்*
*அப்பா.. அம்மா.. அக்காமார், அண்ணாமார், அத்தான் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்*

நிரந்தர முகவரி
கங்குவேலி
மூதூர்
திருகோணமலை

தற்காலிக முகவரி
அன்பு குடியிருப்பு
1ஆம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு

(2818)

## சிந்தனைக்கு

இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 15-04-2003

## தவறான ஒப்பீடு

ஜே.வி.பிக்கு அரசியலில் கலந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கியது போல் விடுதலைப்புலிகளுக்கும் சந்தர்ப்பம் அளிப்பதில் தவறென்ன? விடுதலைப் புலிகளுக்கு அத்தகையதொரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. இது போன்று ஆளும் தரப்பில் உள்ளவர்கள் பொதுக் கூட்டங்களில் பேசுவதுண்டு. இந்த வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கடந்த சில நாட்களிற்கு முன்பு பேசியுள்ளார்.

ஆனால், இவ் ஒப்பீடானது எந்தவகையிலும் பொருத்தப்பாடற்றதொன்றாகும். அதாவது ஜே.வி.பி பாராளுமன்ற அரசியலுக்குள் வந்துள்ளமைக்கும் விடுதலைப்புலிகள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும்நோக்கில் பேச்சுவார்த்தைக்கு வந்தமைக்கும் இடையில் ஒருமைப்பாடு எதுவும் கிடையாது. இரண்டையும் ஒன்றுக்கொன்று உதாரணமாகக் கூறிக்கொள்வது தவறாகும்.

முதலில் ஜே.வி.பி. யானது பாராளுமன்ற அரசியலுக்குள் பிரவேசித்தமையானது அதன் இயலாமையின் வெளிப்பாடே ஆகும். அதாவது இரண்டு தடவை ஆயுதக் கிளர்ச்சி நடத்தி பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர், யுவதிகளை பறிகொடுத்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளமுடியாத அவல நிலையில் பாராளுமன்ற அரசியலுக்குள் பிரவேசித்தவர்கள் ஆகும்.

வேறு விதமாகக் கூறின் தலைமையின் தவறான வழி நடத்தலினால் பெரும் எண்ணிக்கையான இளைஞர்-யுவதிகளின் மரணத்திற்குக் காரணமாகியதோடு-தலைமையையும் இழந்த நிலையில் தமது சித்தாந்தக் கோட்பாடு என்பனவற்றை எல்லாம் ஒதுக்கிவிட்டு பாராளுமன்ற அரசியலுக்குள் நுழைந்தவர்கள். தற்போது அதிகாரத்தைக் கைப்பற்ற இனவாதத்தை தமது கோட்பாடாக வரித்துக் கொண்டுள்ளவர்களாகும்.

அதுமட்டுமல்ல, கிளர்ச்சி என்ற பெயரில் மக்கள் மீது அராஜகத்தை கட்டவிழ்த்துவிட்டு-மக்களின் பெரும் வெறுப்பைச் சந்தித்தவர்கள். ஜே.வி.பி.யின் தலைமையை மூட்டைப் பூச்சி போல் சிறிலங்கா இராணுவம் நசுக்கியபோது எஞ்சிய அடுத்த கட்டதலைவர்கள் கையாலாகாது நாட்டைவிட்டுத் தப்பியோடி வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்தவர்கள்.

ஆனால், விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசாங்கம் வழங்கிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசியலுக்குள் பிரவேசித்தவர்கள் அல்ல. சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியே வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தையே உருவாக்கியவர்கள். அதாவது புலிகளுடன் பேசாவிட்டால் சிறிலங்கா அரசினால் இயங்க முடியாது போய்விடும் என்ற சூழ்நிலையை உருவாக்கியவர்கள்.

அதாவது ஜே.வி.பி.யை அடக்கி ஒடுக்கியது போன்று புலிகளையும் அடக்கி ஒடுக்கிவிடலாம் என்ற கற்பனையுடன் யுத்தத்தில் இறங்கிய சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கு சரியான பாடம் புகட்டியவர்கள். இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கமுடியாது என்பதை சிறிலங்கா அரசும், சர்வதேச நாடுகளும் ஏற்றுக் கொள்ளும் அளவில் சிறிலங்கா இராணுவத்தை தோல்வியுறச் செய்தவர்கள்.

மேலும் விடுதலைப்புலிகள் தமது போராட்டத்திற்கான அடிப்படைக் கோட்பாடுகள் எவற்றையும் விட்டுக்கொடுத்தோ அன்றி உதறித்தள்ளிவிட்டோ அரசியல் பேச்சுவார்த்தைக்கு வந்தவர்கள் அல்ல. தமது கோட்பாடு சித்தாந்தங்கள் என்பனவற்றை ஆயுதப் போராட்டத்திற்கு அப்பால் அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலம் எட்டப்பட முடியுமா? என்பதை ஆராய்வதற்கு முற்பட்டுள்ளார்கள்.

இதற்கும் மேலாக, ஜே.வி.பி. போன்று மக்களால் ஓரம் கட்டப்பட்டு வெறுத்தொதுக்கப்பட்ட நிலையில் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கோ, அரசியல் பேச்சுவார்த்தைக்கோ வரவில்லை. தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக தமிழ் மக்களின் உரிமை குறித்தும் பேசுவதற்கான அங்கீகாரம் பெற்ற ஒரே சக்தியாகப் பேச்சுவார்த்தையிலும், அரசியல் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளவர்கள்.

இந்நிலையில் ஜே.வி.பியுடன் விடுதலைப் புலிகளை ஒப்பிடுவதும், ஜே.வி.பி.க்கு வழங்கிய சந்தர்ப்பம் போன்று புலிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குவது எனக் கூறிக்கொள்வதும் தவறான ஒப்பீடே ஆகும். அத்தோடு புலிகள் யுத்தத்தில் தோல்வி அடைந்திருந்தால் ஆட்சியாளர்கள் பேச முன்வந்திருப்பார்களா என்பதும் சந்தேகமே. ஆகையினால் மேற்கூறப்பட்டவாறான ஒப்பீட்டை ஆட்சியாளர்கள் தவிர்த்துக் கொள்ளுதல் விரும்பத்தக்கது. ஏனெனில், இத்தகைய சிந்தனையானது அவர்களைத் தவறான பாதையில் இட்டுச் செல்வது மட்டுமல்ல, சிங்கள மக்களுக்குத் தவறான விளக்கத்தைக் கொடுத்துவிடக் கூடியதாகும். இது பின்னரும் நெருக்கடிகளைத் தோற்றுவித்து விடக்கூடும்.

அதாவது விடுதலைப் புலிகள் இயக்கம் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவும், பாராளுமன்றத்தில் நுழைவதற்கும் பேச்சுவார்த்தை நடத்துவதாக பிழையானதொரு தோற்றப்பாட்டைக் கொடுத்துவிடக் கூடும். ஆனால், விடுதலைப் புலிகள் இவை எதற்கும் போராடவும் இல்லை. பேசவும் இல்லை. அவர்கள் போராடுவதும், பேசுவதும் தமிழர் தாயகத்திற்காகவும், தமிழர் உரிமைகளுக்காகவுமே.

## இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கொபி அனான் அங்கத்துவ நாடுகளிடம் வேண்டுகை

(கொழும்பு)

இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் அவரது அலுவலகத்தில் வைத்து மிலிந்த மொறகொடவை கடந்த சனியன்று சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு பற்றியும் இருவரும் விரிவாக கலந்துரையாடியுள்ளதாக மிலிந்த மொறகொட விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

மேலும், சமாதான முயற்சிகளின் பலனாக சர்வதேச நாடுகள் மத்தியில் இலங்கைக்கு மதிப்பு ஏற்பட்டுள்ளதையும், இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் பொருளாதார அபிவிருத்தியை முன்னிட்டும் தான் மகிழ்ச்சியடைவதாக கொபி அனான் கூறியுள்ளார்.

அத்துடன் டோக்கியோ மாநாட்டிற்கு தனது சிரேஷ்ட பிரதிநிதி ஒருவரை அனுப்புவதற்கு கொபி அனான் முடிவு செய்துள்ளார்.

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், ஐக்கிய நாடுகள் சிறுவர் கல்வி நிதியம் உட்பட பல்வேறு சர்வதேச அமைப்புக்கள் பொருளாதார ரீதியில் உதவி வழங்க முன்வந்துள்ளமையைத் தொடர்ந்து ரணில் தலைமையிலான அரசாங்கம் சார்பாக நன்றி தெரிவிப்பதாக கொபி அனானிடம் மிலிந்த மொறகொட கூறியதாக அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### - தமிழ்மொழி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குமுன் -

## தென் பகுதியில் எழக்கூடிய எதிர்ப்புக் குறித்து ரணில் விக்கிரமசிங்க ஆராய்கிறாராம்?

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் கடமையாற்றி வரும் ஆயிரம் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது குறித்து சிறிலங்காப் பிரதமர் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆயிரம் தமிழ் மொழிமூல ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அவர் இணக்கம் தெரிவித்துள்ள போதிலும் அதனால் தென்பகுதியில் எழக்கூடிய எதிர்ப்பு குறித்து அவர் ஆலோசித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வட-கிழக்கில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமிடத்து தென்பகுதியில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் அதற்கு எதிராக போராட்டங்களை நடத்த வாய்ப்பு இருப்பதாகப் பிரதமர் கருதுவதாகக் கூறப்படுகின்றது.

அத்தோடு தமக்கு நியமனங்களை வழங்குமாறு கோரி அவர்கள் வழக்குத் தாக்கல் செய்யும் நிலையும் ஏற்படலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

## புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகள் மட்டக்களப்பில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் முஸ்லிம்களின் விடயங்களை கையாள்வதற்கான குழுவின் கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் இம்மாதம் 29 ஆம் திகதி காலை 10 மணிக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வவுணதீவு பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் மட்டு - அம்பாறை சிறப்பு தளபதி ரமேஸ், மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோரும், முஸ்லிம் தரப்பில் பிரதியமைச்சர் பசீர் சேகுதாவுத் தலைமையிலான குழுவினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## பிரதமர் உரையாற்றுவார்!

(கொழும்பு)

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாண்டு ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்றவுள்ளார்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்துவதில் அரசாங்கம் காட்டிவரும் பொறுப்புணர்ச்சி காரணமாக ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்றுவதற்கு பிரதமர் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்படுவதாக ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

## மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான முதல் டெஸ்ட்: அவுஸ்திரேலியா 9 விக்கெட்டுக்களால் அமோக வெற்றி!

கயானாவில் நேற்று முன்தினம் நிறைவுபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஆகக் கூடுதலான 157 டெஸ்ட் போட்டியில் விளையாடி புதிய சாதனை நிகழ்த்திய அணித் தலைவர் ஸ்ரீவோவுக்கு இந்த வெற்றி மகத்தானதாக அமைந்தது.

போட்டியில் வெற்றிபெறுவதற்கு 147 ஓட்டங்கள் பெறவேண்டிய அவுஸ்திரேலியா நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டத்தின் தேனீர் இடைவேளைக்குச் சற்று முன்னர் வெற்றி இலக்கை அடைந்தது.

நான்கு போட்டிகள் கொண்ட இத்தொடரில் அவுஸ்திரேலியா வெற்றி பெறுமானால் உலக டெஸ்ட் தரப்படுத்தலில் மீண்டும் முன்னணி இடத்தை அடையும். தற்போது அவ்விடத்தை தென்னாபிரிக்கா பெற்றுள்ளது.

இப்போட்டியின் முதலாவது இனிங்ஸ் நிறைவில் 252 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த மேற்கிந்தியதீவு அணி இரண்டாவது இனிங்சின் ஒரு கட்டத்தில் 382 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து சிறந்த நிலையில் இருந்தது. எனினும், அதன் கடைசி ஐந்து விக்கெட்டுக்கள் 16 ஓட்டங்களுக்கு வீழ்ந்ததை அடுத்து மேற்கிந்தியத்தீவு இரண்டாவது இனிங்ஸில் 398 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. மேற்கிந்தியத் தீவு நேற்று முன்தினம் தனது இரண்டாவது இனிங்சை 381 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் என்ற நிலையில் தொடர்ந்தபோது கிலெக்ஸ்பி 4 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தி அவுஸ்திரேலியாவின் வெற்றிக்கு வழிகோலினார்.

மேற்கிந்தியதீவு முதல் இனிங்ஸ் 237 ஓட்டங்கள். சந்திரபோல் 100 ஓட்டங்கள் ஜெக்கப்ஸ் ஆட்டம் இழக்காது 54 ஓட்டங்கள்.

அவுஸ்திரேலியா முதல் இனிங்ஸ் 489 ஓட்டங்கள், லாங்கர் 146 ஓட்டங்கள் பெண்டிங் 117 ஓட்டங்கள் கில்கிறிஸ்ட் 77 ஓட்டங்கள்.

மேற்கிந்தியத் தீவு இரண்டாவது இனிங்ஸ் 398 ஓட்டங்கள் ஹுங்கா 113 ஓட்டங்கள் லாறா 110 ஓட்டம் டி.சிமித் 62 ஓட்டங்கள். கிலெஸ்பி 39 ஓட்டங்களுக்கு 5விக்கெட்டுக்கள்

அவுஸ்திரேலியா இரண்டாவது இனிங்ஸ் ஒரு விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்தது. லாங்கர் ஆட்டம் இழக்காது 77 ஓட்டங்களையும் பொண்டிங் ஆட்டம் இழக்காது 42 ஓட்டங்களையும் பெற்றனர்.



இஸ்ரீவ்வோ

# மக்கள் குடியேறமுடியாதளவில் அழிவுற்ற நிலையில் இலுப்பைக்குளம்

(திருமலை)

திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேற முடியாதவாறு அக்கிராமம் அழிந்துபோயுள்ளது.

பதின் மூன்று ஆண்டுகளின் முன்னர் சிறிலங்காப் படையினரின் ஆக்கிரமிப்பு தாக்குதல்கள் காரணமாக இலுப்பைக் குளம் கிராமத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர்.

1983இல் இக்கிராமத்தை விட்டு முதலில் மக்கள் இடம் பெயர்ந்து சென்றனர். மீண்டும் 1987 இல் குடியேறிய மக்கள் 1990 இல் திரும்பவும் இடம் பெயர்ந்திருந்தனர்.

இலுப்பைக்குளம் பாரம்பரிய தமிழ்க்கிராமங்களில் ஒன்று. சிறிலங்காப் படையினரின் நடவடிக்கைகள் காரணமாக அந்த கிராமத்தின் உட்கட்டுமானங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அக்கிராம மக்களின் வாழ்வாதாரங்களும் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் மீண்டும் தமது கிராமங்களுக்குத் திரும்ப முடியாதுள்ளனர். இக்கிராம மக்கள் தற்போதும் உள்ளூர் அகதி முகாங்களிலும் தென்னிந்தியாவிலுள்ள அகதி முகாங்களிலும் அவலங்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். (25)

## - கிளி. நகரில் மோதலில் ஈடுபட -
# தயார் நிலையில் இருந்த இரு குழுக்கள் நேற்றுக் கைது!

கிளிநொச்சி நகரப் பகுதியில் மோதலில் ஈடுபடத் தயார் நிலையிலிருந்த இரு குழுக்களை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தமிழீழ காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

குற்றச்செயல்களை தடுக்கும் நோக்கில் கிளிநொச்சி காவல்துறையினர் நேற்றைய தினம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர். மேற்படி ரோந்தில் ஈடுபட்ட காவல்துறையினரால் மக்கள் நடமாட்டம் அதிகளவில் உள்ள இடங்களில் பட்டாசுகளைக் கொழுத்திப் போட்டு இடையூறு விளைவித்தவர்களும், மது போதையில் கைகலப்புகளில் ஈடுபட்டவர்களும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டனர். அத்துடன் கிளிநொச்சி நகரப்பகுதியில் மோதல் ஒன்றுக்கு தயாரான இரு குழுக்களை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காவல்துறை உறுப்பினர்கள் உடனடியாக அவர்களைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். (லோ)

# சிரியா மீதான கடும்போக்கு அறிக்கைகளை அமெரிக்கா குறைத்துக்கொள்ள வேண்டும்!

## ஐரோப்பிய யூனியன் வெளிவிவகாரத் தலைவர்

சிரியாமீது கடுமையான போக்குள்ள அறிக்கைகள் விடுவதை குறைத்துக்கொள்ளுமாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரகொள்கைகளுக்குப் பொறுப்பான தலைவர் சொலாணா அமெரிக்காவைக் கோரியுள்ளார்.

மத்திய கிழக்கில் நெருக்கடி நிலைமையைத்தணிப்பதற்குரிய வேளை வந்துள்ளது. ஈராக் மீதான யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சிரியா ஈராக்கிய அதிகாரிகளுக்கு புகலிடம் அளிக்கக்கூடும் அல்லது இரசாயன ஆயுதங்களை தனது கையிருப்பில் வைத் திருக்கக் கூடும் என்று அமெரிக்க சனாதிபதி சிரியாமீது குற்றம் சுமத்தியுள்ளார்.

சிரியா இந்த குற்றச் சாட்டினை நிராகரித்துள்ளது.

இதேவேளை, சதாம் ஹுசைனின் ஆட்சிக்கு உமாஸ்கஸ் அரசாங்கம் ஆதரவு வழங்கியதாகவும், ஈராக்கிய தலைவர்கள் புகழிடம் தேட அந்த நாடு உதவிவருவதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனாட் ரம்ஸ்பீல்ட் குற்றம் சாட்டியுள்ளார்.

## வரதன் குழுவின் வாகனம் மோதி
# குடும்பஸ்தர் மரணம் மனைவி படுகாயம்

மட்டக்களப்பு கல்லடியில் வரதன் குழு தேசவிரோதிகளின் வாகனம் மோதியதால் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். இவரது மனைவி படுகாய மடைந்துள்ளார்.

துவிச்சக்கரவண்டி ஒன்றில் இருவரும் சென்றுகொண்டிருந்த போது அவர்களின் மீது வரதன் குழுவைச் சேர்ந்தவர்களின் வாகனம் மோதிவிட்டு அவ்விடத்திலிருந்து வேகமாகத் தப்பிச்சென்றுள்ளது.

### இல.யின்...

இதனால், அந்தப் பகுதி மக்கள் இந்த விடயம் தொடர்பில் விரக்தியுடன் காணப்படுகின்றனர். இதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### புலிகளின்...

வந்தடைந்துள்ளனர்.

இக்குழுவினர் நேற்றுக் காலை விமானம் மூலம் கொழும்பை வந்தடைந்து அங்கிருந்து வாகனம் மூலம் கிளிநொச்சியை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. (லோ)

### பாக். படைத்...

கள் உள்ளடங்கிய இருந்த இக் குழுவில் இரண்டு பிரிகேடியர்கள், நான்கு லெப்.கேணல்கள் கடற்படை மற்றும் வான் படையதிகாரிகள் இருக்கின்றனர்.

சிறிலங்கா படையதிகாரிகள் குழுவில் படைத்துறை அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் பொலிஸ்மா அதிபரும் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பின்போது சிறிலங்காவின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை குறித்து படைத்துறை அமைச்சின் செயலாளர் விளக்கமளித்துள்ளார்.


## தமிழீழ மாணவர் அமைப்பின்
# கணினி பயிற்சி வகுப்பு

2004ஆம் ஆண்டு தொடக்கம் க.பொ.த. சாதாரண தரத்தில் தகவல் தொழில்நுட்பம் ஒரு பாடமாக் அறிமுகமாவதை முன்னிட்டு இவ்வாண்டு தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கணினி பயிற்சி வகுப்பு.

காலம் - 16.04.2003 புதன் தொடக்கம் 19.04.2003 சனி வரை
காலை 9.00 மணி தொடக்கம் பிப 4.30 வரை.

**பயிற்சி வகுப்பு நடைபெறும் இடங்கள்.**

மடு
- அடம்பன் ம.வி
- பெரிய பண்டிவிரிச்சான் ம.வி.

முல்லைத்தீவு
- வித்தியானந்தாக் கல்லூரி
- ஒட்டுசுட்டான் ம.வி.
- முல்லைத்தீவு ம.வி.
- புதுக்குடியிருப்பு ம.வி.
- பாலிநகர் ம.வி.

கிளிநொச்சி
- தருமபுரம் ம.வி.
- அக்கராயன் ம.வி.
- முழங்காவில் ம.வி.

2003ஆம் ஆண்டு தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரையும் இக் கணினி பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(2278) **தமிழீழ மாணவர் அமைப்பு.**


### இந்-இல...

மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் உதவியுடன் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலத்தை அமைக்க முயற்சி எடுத்து வருவதாக அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

### அமெரிக்கா-சிறி...

எடுக்கப்படுமென்றும் அமைச்சர் கூறினார்.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை உருவாக்குவததற்காக உற்பத்தி மற்றும் முதலீட்டு ஒப்பந்தப் பிரகாரம் அமெரிக்கா தெரிவு செய்துள்ள பதினொரு நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இதற்காக முதற்கட்ட ஒப்பந்தம் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க கடந்த யூலையில் அமெரிக்காவிற்குச் சென்றிருந்த போது கைச்சாத் திட்டிருந்தது குறிப்பிடத்தக்தாகும்.

### ஆரையம்பதி...

கணேசன் என்ற குடும்பஸ்தர் ஸ்தலத்திலேயே பலியாகியதாகவும் மூன்று பெண்கள் உட்பட நால்வர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை, கைக்குண்டு வீச்சையடுத்து வீட்டில் இருந்தவர்களினால் வரதன் குழுவினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும இதில் வரதன் குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மேலும் நால்வர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கொல்லப்பட்ட வரதன் குழுவைச் சேர்ந்தவரின் உடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்ததாகச் சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ரெலோ உறுப்பினரும், ரெலோ வேட்பாளரும் பின்னர் சிறிலங்காப் புலனாய்வுத் துறையுடன் இணைந்து செயற்பட்டவரும், அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்டவருமான 'வரதன்' என்பவரின் தலைமையில் இயங்கிய தேச விரோத சக்திகளே வரதன் குழு என அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## -தடை விதிக்கப்பட்டுள்ளபோதும் -
# வாய்க்கால்களில் மணல் ஏற்றுதல் தொடர்கிறது!

(வட்டக்கச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வாய்க்கால்களில் மணல் ஏற்றுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளபோதிலும் இந்த மணல் ஏற்றும் நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வியாபார நோக்கத்திற்காகவும் ஏனைய தேவைகளுக்காகவும் இம்மணல் அகழ்ந்து ஏற்றப்படுகிறது.

அத்துடன், மணல் ஏற்றுவதற்கு வசதியாக வாய்க்கால்களின் ஒரங்களும் வெட்டி சேதப்படுத்தப்பட்டு வருகின்றன.

நெற்செய்கைக்கான நீரினை வழங்கும் இவ்வாய்க்கால்களில் இருந்து இவ்வாறு மணல் அகழப்படுவதால் அடுத்து வரும் காலங்களில் நீர் விநியோகங்களை மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (12)

# நான்கு மன்னார் மீனவர்கள் விமானம் மூலம் திரும்பினர்!

## இருவர் தொடர்ந்தும் தடுத்துவைப்பு

(கொழும்பு)

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு மன்னார் மீனவர்கள் கடந்த புதன்கிழமை விமானம்மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை கடந்த 21 ஆம் திகதி இந்திய கடலோரக் காவல்படையினரால் ஆறு தலைமன்னார் மீனவர்கள் கைதுசெய்யப்பட்டதுடன் அவர்களின் இரண்டு கண்ணாடி இழைப்படகுகளும் கைப்பற்றப்பட்டிருந்தன.

இம்மாதம் ஆறாம் திகதி இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இந்த ஆறு பேரில் நால்வரை விடுவித்த நீதிமன்றம் இருவரை தொடர்ந்தும் தடுத்துவைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

தடுத்துவைக்கப்பட்டுள்ள இரண்டு மீனவர்களும் மதுரை சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்ட நான்கு மீனவர்களும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடந்த புதன் கிழமை வந்திறங்கினர்.

### சிரியா மீது...

பொழுது ஈராக் தலைவர்கள் தப்பியோடுவதற்கும், தலைமறைவாக வாழ்வதற்கும் உதவி வருவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளதோடு, சிரியா இரசாயன ஆயுதங்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டத் தொடங்கியுள்ளது.

மேலும், அமெரிக்காவின் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலிலுள்ள லெபனான் ஹிஸ்புல்லா, பலஸ்தீன இஸ்லாமிக் ஜிகாத், கமாஸ் ஆகிய அமைப்புகளுக்கு தொடர்ந்து உதவுவது ஆகிய இரு குற்றச்சாட்டுக்களை சிரியா மீது அமெரிக்கா முன்வைத்துள்ளது. அத்தோடு "அரச ஆதரவுப் பயங்கரவாதம்" என்ற அமெரிக்காவின் பட்டியலில் சிரியா இன்னமும் உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, சிரியாவின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தி ஊடகப் பிரிவின் தலைவராகவும், அதிபர் அசாத்தின் ஆலோசகருமாகவுள்ள டாக்டர் சபான் இது குறித்து தெரிவிக்கையில்,

சிரியா ஒரு பொறுப்பான நாடு. அது வாஷிங்டன், லண்டனுடன் நட்பையே வைத்திருக்க விரும்புகின்றது. நாங்கள் எவருக்கும் அடைக்கலம் கொடுக்கப் போவதில்லை. எங்களிடம் வந்து ஈராக்கிய அதிகாரிகளும் அடைக்கலம் கேட்கவில்லை. ஈராக்கிய நிர்வாகத்திற்கும் எங்களுக்குமிடையே இருந்த உறவு மோசமானது. எமக்கும் ஈராக்கிற்குமிடையே பல்லாண்டு காலமாக இருந்த பிரச்சினைகளை மறந்துவிட்டு அண்மையில் அதற்கெதிராக தொடுக்கப்பட்ட போருக்கு நாங்கள் காட்டிய எதிர்ப்பை மட்டும் பார்க்கக்கூடாது. ஒரு காலத்தில் ஈராக்கிய அரசை, நிர்வாகத்தை முழு உலகமே ஆதரித்த போது அதை எதிர்த்து நின்றது சிரியா மட்டும்தான் எனக் கூறினார்.

### அமெரிக்கா உப...

தலைமையகத்தில் உலக வங்கியின் பிரதிநிதிகளையும் பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதி களையும் அமைச்சர் மிலிந்த மொறகொட சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத் தியுள்ளார்.

அத்துடன் நெதர்லாந்து அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதி அமைச்சரையும் மாநாட்டிற்கு வருகை தந்திருந்த வெளிநாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய தற்போதைய சமாதானச் சூழலை சிறிலங்கா அரசு சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளும் என்று தான் எதிர்பார்ப்பதாகவும், இவ்வருட இறுதிக்குள் தான் கொழும்பிற்கு வருகைதரவுள்ளதாகவும் உலக வங்கித் தலைவர் கூறியுள்ளார். அமைச்சர் மிலிந்த மொறகொட வைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

### ஆர்மிரேட்...

ஜப்பானில் தலைநகர் டோக்கியோவில் எதிர்வரும் யூன் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கான முன்னாயத்த மாநாடாகவே இது நடை பெறுகின்றது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ள தமக்கு அழைப்பு விடுக்காமை குறித்து விடுதலைப்புலிகளும் அதிருப்தி வெளியிட்டுள்ள நிலையில் இம்மாநாடு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.